**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 12/2020**

**Prosecution Witness 5 (LW 24)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வமணி | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | பாலுச்சாமி தேவர் | தொழில் | : | ஓட்டுநர் |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.09.2024.

( எதிரி ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை:

1) நான் தற்சமயம் தேனி மாவட்டம் அல்லிநகரத்தில் குடியிருக்கிறேன். இந்த வழக்கு சம்பந்தமான போலீசார் சம்பவயிடத்தில் விசாரணை செய்தார்கள். கடந்த 04.03.2019 அன்று நானும் துரைசிங்கம் ஆகியோர் சம்பவயிடத்தில் இருக்கும் போது காலை 09.30 அளவில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு நாங்கள் சாட்சிகளாக இருந்தோம். அரசு பள்ளிக்கு அருகில் விசாரணை செய்தார்கள். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். எங்களை போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி:**

| | |
|---|---|
| கேள்வி | அசா1 உங்களுடைய உறவினர்என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | நீங்கள் அரசு மருத்துவமனைக்கு எப்போது சென்றீர்கள் ? |
| பதில் | காலை 08.30 மணி இருக்கும் |
| கேள்வி | நீங்கள் எதில் சென்றீர்கள் ? |

| | |
|---|---|
| பதில் | இரு சக்கர வாகனத்தில். |
| கேள்வி | நீங்கள் பார்வை மகஜரில் கையெழுத்து செய்யும்போது அதில் குறிப்பிட்ட நேரம் எதுவும் திருத்தம் செய்யப்படவில்லை என்றால் ? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | ஆனால் தற்போது அதில் திருத்தம் உள்ளது என்றால்? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | நீங்கள் சம்பவயிடத்தில் சென்று கையெழுத்துசெய்யவில்லை காவல் நிலையம் சென்று கையெழுத்து செய்தீர்கள் என்றால் ? |
| பதில் | இல்லை சம்பவயிடத்தில் கையெழுத்து செய்தேன் |
| கேள்வி | சம்பவயிடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் ? |
| பதில் | நாங்கள் இரண்டு நபர்கள் இருந்தோம் |
| கேள்வி | தேனி மதுரை ரோட்டின் நடுவில் டிவைடர் கோடு இருந்தது என்றால் ? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | மேற்படி வெள்ளை கோட்டிற்கு வடக்கே நான்கு அடி வடக்கே தள்ளி சம்பவம் நடந்ததாக அடையாளம் செய்தார்கள் என்றால் ? |
| பதில் | சரிதான் |

மறு விசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 18.09.2024 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

ஓம்.எஸ்.கோபிநாதன்
கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
18.09.2024